Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

தினத்தளம்
நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,


மலர் Volume : 01 | இதழ் Issue : 002 | வியாழக்கிழமை Thursday | 02.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# என்டிஏ ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டின் பெயரை மாற்றவும் தயங்காது

## திருச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், திருவாரூரில் தனது தேர்தல் பிரச்சார பயணத்தை தொடங்கினார். அங்கு பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு திருச்சிகோர்ட்யார்ட் நட்சத்திர விடுதியில் ஓய்வெடுத்தார்.

தொடர்ந்து, காலை, திருச்சி கிழக்குத் தொகுதியில் வாக்கிங் சென்றபடி திமுகசார்பில் போட்டியிடும் இனிகோ இருதயராஜ்க்கு ஆதரவாக வாக்கு கேட்டார். இத்தொகுதியில் தவெக தலைவர் சி.ஜோஸப் விஜய் போட்டியிடுகிறார். நாளை விஜய் இத்தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார்.

பின்னர் ஸ்டாலின் நட்சத்திர விடுதிக்கு சென்று காலை உணவு முடித்துக் கொண்டு, தென்னூர் உழவர் சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார்.

அங்கு திமுக வேட்பாளர்கள் திருச்சி மேற்கு கே.என்.நேரு, திருவெறும்பூர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு இனிகோ இருதயராஜ், மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன், ஸ்ரீரங்கம் துரைராஜ், முசிறி கருணை ராஜா, லால்குடி பாரிவள்ளல், மமக ப.அப்துல்சமது ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திலும், காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறையூர் (தனி) தொகுதிக்கு கை சின்னத்திலும் வாக்களிக்குமாறு கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

திருவாரூரில் பிரச்சாரத்தை தொடங்கி, திருச்சிக்கு வந்திருக்கிறேன். கடந்த முறை திருச்சி மாவட்டத்தில் 9 தொகுதிகளிலும் திமுகவுக்கு வெற்றியை தந்தீர்கள். அந்த வெற்றியால், சிறந்த 2 அமைச்சர்களைத் தமிழகத்துக்கு தந்தீர்கள். இந்த முறையும் திருச்சியில் முழு வெற்றி. தலைநகர் சென்னைக்கே சவால் விடும் வகையில் திருச்சி இன்றைக்குத் தரம் உயர்ந்து வருகிறது. 5 ஆண்டுகளில் திருச்சிக்காக ரூ.26 ,066 கோடி மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாதிக் கலவரம் இல்லை. பாஜக ஆளும் மாநிலங்களான உ.பி., மணிப்பூர் ஆகியவற்றில் உள்ளதுபோல மதக் கலவரங்கள், கும்பல், தொடர் வன்முறைகள் இல்லை. கலவரம் உருவாக்க வேண்டும் என்று பாஜக செய்த சூழ்ச்சிகளையும் முறியடித்திருக்கிறோம்.

திமுக தேர்தல் அறிக்கையில், இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன் வழங்கும் சூப்பர் டூப்பர் வாக்குறுதியை பற்றித்தான் ஒரே பேச்சாக உள்ளது. நம்முடைய பெண்கள் ஒரு சேலை வாங்கினால் கூட, அவர்களுக்குப் பிடித்த கடையில், பிடித்த டிசைனில், கலரில் வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதை மனதில் வைத்துதான் இந்த திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

இல்லத்தரசி திட்டத்தில் எல்லாமே உங்கள் 'சாய்ஸ்'தான். அனைத்து தொகுதிகளிலும் முதல்வர் படைப்பகங்கள் அமைக்கப்படும். இல்லத்தரசிகள் திட்டத்தைப் ஊழலுக்கான திட்டம் என சம்பந்திக்கு காண்ட்ராக்ட் கொடுப்பதற்காகவே ஆட்சியை நடத்திய பழனிசாமி கூறுகிறார்.

திமுகவின் திட்டம் ஒவ்வொன்றும் தராமானது என்பதற்கு உதாரணம் கலைஞர் டிவி. 20 ஆண்டுகளாகியும் இன்றும் பல வீடுகளில் கலர் டிவியாக மட்டுமல்ல, கலைஞர் டிவியாக அது நிலைத்து நிற்கிறது. அதிமுக ஆட்சியில் வழங்கிய மிக்சி, கிரைண்டர், மின்விசிறி காயலாங்கடையில் இருக்கிறது. மக்களுக்கு நல்லது நடக்கக் கூடாது என்று, வயிற்றெரிச்சலில், தன்னை போலவே பிறரையும் நினைத்து ஊழல் நடக்கும் என்று பேசுகிறார்.

மதுரை பாஜக ஆதரவு கூட்டத்தின் நுழைவு வாயிலில் தந்தை பெரியார் படத்தை வைக்கக் கூடாது என்று பாஜக சொன்னதும், சுயமரியாதையே இல்லாமல் அதை எடுக்கத் துணிந்தவர்தான் பழனிசாமி. அதில் பெரியாரையும், அண்ணாவையும் கொச்சைப்படுத்தும் காணொலியை வெளியிட்டார்கள். அதிமுக முன்னாள் அமைச்சர்கள் 3 பேர் கொஞ்சம் கூட சொரணையே இல்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்தால் அண்ணாவை அசிங்கப்படுத்தினால் பார்த்துக்கொண்டு சும்மா இருந்திருப்பார்களா? பழனிசாமியின் ஒரே சாதனை அதிமுக எனும் கட்சியை அடிமைக் கூட்டமாக சீரழித்து இருப்பதுதான். 'திராவிடம்' என்ற சொல்லும் அந்தக் கூட்டத்தில் அவமானப்படுத்தப்பட்டது. திராவிடம் பற்றி படித்ததில் என்றார். யார் எக்கேடு கெட்டாலும் தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொள்ள பாஜகவின் பாதம் தாங்கியாக பழனிசாமி உள்ளார்.

சிறுபான்மையினர், இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் (சிஏஏ) சட்டத்தை ஆதரித்து அது நிறைவேற துணைபோன கட்சிதான் அதிமுக. இவர்களுடன் சேர்ந்து 'பாட்டாளி' அன்புமணி ராமதாசும் ஆதரவாக வாக்களித்து துரோகம் செய்தார். இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான சிஏஏ சட்டமே நிறைவேறியது. அதைத் தொடர்ந்து நடந்த போராட்டங்களில் 70 பேர் கொல்லப்பட்டார்கள்.

பிரதமர் மோடி தமிழகத்தில் ஒருவாரம் தங்கியிருந்து, தலைசிறந்த தமிழ்நாடாக இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தொடர வேண்டும் என்றால், 7வது முறையும் திமுக ஆட்சி அமைய வேண்டும், பாஜகவும் அதன் கொத்தடிமைக் கூட்டமும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தால், உத்தரபிரதேசம், மணிப்பூர் போன்று வன்முறைக் காடாக ஆகிவிடும். இவர்கள் வந்தால் தமிழ்நாட்டின் பெயரையே தட்சிண பிரதேஷ் என்று மாற்றவும் தயங்க மாட்டார்கள்.

இதைத் தடுக்க வேண்டும் என்றால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் பாஜக – அதிமுக கூட்டணிக்கு எதிராக, ஓரணியில் இணைய வேண்டும். நம்முடைய எதிரிகளையும், பாஜகவின் உதிரிகளையும் வீழ்த்த வேண்டும். நாம் போராடுவது, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக. பாஜகவின் டப்பா இன்ஜின் முன்னால், நம்முடைய திராவிட மாடலின் சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சின் ஒருபோதும் தலைகுனியாது. நம்முடைய ஸ்பீடு என்ன என்று காண்பிப்போம்.

# 'மக்கள் சாப்பாடு' திட்டம் முதல் பெண்ணின் திருமண வயது 21 வரை

## பா.ம.க. தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்



பூரண மதுவிலக்கு, வேலையில்லா பட்டதாரிகளுக்கு ரூ.5 ஆயிரம் உதவித் தொகை, ரூ.10-க்கு சாப்பாடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட வாக்குறுதிகள் பாமகவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

பாமக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

- பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும்.
- பெண்களின் திருமண வயது 21 ஆக உயர்த்தப்படும்.
- கல்விக்கடன் ரத்து செய்யப்படும்.
- சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்.
- தமிழ்நாட்டில் 5 லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும்.
- அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 1 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- வேலைவாய்ப்பு இல்லாதா பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.5,000 வழங்கப்படும்.
- கரும்புக்கு டன்னுக்கு ரூ.5,000 கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும்.
- பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படும்.
- ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைக்கு 2கிலோ நாட்டு சர்க்கரை வழங்கப்படும்.
- தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தை அரசு ஏற்கும்.
- தமிழ்நாட்டின் 2வது தலைநகரமாக திருச்சியை மாற்றுவோம்.
- குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும்.
- ஞாயிற்றுக்கிழமையில் ரூ.25-க்கு அசைவ சாப்பாடு வழங்கப்படும்.
- ரூ.10-க்கு 'மக்கள் சாப்பாட்டு' திட்டம் தொடங்கப்படும்.
- நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும், உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் பாமக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் பட்டியல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# நாடு முழுவது, 8வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடக்கம்



இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக 2011-ம் ஆண்டு நடத்தப்பட்டது. சுதந்திரத்துக்கு பிறகு இதுவரை 7 முறை மக்கள் தொகை கணக்கெடுப்புகள் நடந்துள்ளன. 8-வது கணக்கெடுப்பு கடந்த 2021-ம் ஆண்டே நடத்தியிருக்க வேண்டும், ஆனால் கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டது.

இந்த கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு (2027) 2 கட்டங்களாக நடக்கிறது. இதில் முதல்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டே தொடங்குகிறது. அதன்படி இன்று (ஏப்ரல் 1-ந்தேதி) முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை வீடுகளை பட்டியலிடுதல், வீடுகளை கணக்கெடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக்கொள்ள முடியும். இதற்கான முறையான அறிவிப்புகளை மத்திய அரசு ஏற்கனவே வெளியிட்டிருந்தது. மத்திய அரசு வெளியிட்டிருந்த அறிவிப்பில், 2027-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் வீட்டுப் பட்டியல் நடவடிக்கைகள் ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அந்தந்த மாநிலமும் யூனியன் பிரதேசமும் குறிப்பிடும் 30 நாட்களுக்குள் நடைபெறும் என்று மத்திய அரசு இதன்மூலம் அறிவிக்கிறது என குறிப்பிடப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் இந்த முறை டிஜிட்டல் முறையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதனால், மாநிலம் வாரியாக, சுய விபர பதிவு மற்றும் கணக்கெடுப்பாளர் வீடு தேடி வரும் தேதிகள் மாறுபடுகின்றன. அந்த வகையில், தமிழகத்தில் பொதுமக்கள் தங்களது சுய விபரங்களை, ஜூலை 17 முதல் 31ம் தேதி வரை பிரத்யேக இணையதளத்தில் பதிவு செய்யலாம். வீடு தேடி வரும் நேரடி கணக்கெடுப்பு, ஆக., 1 முதல் 30ம் தேதி வரை நடக்கிறது. புதுச்சேரியில், சுய விபர பதிவு, மே 17 முதல் 31ம் தேதி வரையிலும், வீடு தேடி வரும் கணக்கெடுப்பு, ஜூன் 1 முதல் 30ம் தேதி வரையிலும் நடக்கிறது.

இந்த நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (01.04.2026) தொடங்குகிறது. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை, டிவி, இருசக்கர வாகனம், கணினி உள்ளிட்ட பொருட்களின் எண்ணிக்கை எத்தனை உள்ளது என்பது உள்ளிட்ட 33 கேள்விகள் இதில் கேட்கப்படும்.

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஊத்தங்கரையில் அதிமுக வேட்பாளர் அறிமுகக் கூட்டம்

## அதிமுக துணை பொது செயலாளர் கே.பி. முனுசாமி பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி னார். ஊத்தங்கரைசட்டமன்றத்தொகுதிக்கு அதிமுக தலைமை கழகத்தால் வேட்பாளராக டி.எம். தமிழ்செல்வம் அறிவிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இந்த கூட்டத்தில், கே.பி. முனுசாமி அவர்கள் வேட்பாளர்டிஎம்தமிழ்செல்வத்தை அறிமுகப்படுத்தி வைத்து வாழ்த்துக்களைத்தெரிவித்தார். ஏற்கனவே தொடர்ந்து மூன்று முறை இப்பகுதியில் அதிமுக வெற்றி பெற்றுள்ள நிலையில், நான்காவது முறையாகப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். கூட்டத்தில் பேசிய கழகத் துணை பொது செயலாளர்கே.பி.முனுசாமி,கடந்த ஐந்து ஆண்டுகால திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து விட்டதாகக் குற்றம் சாட்டினார். அவர் மேலும் பேசுகையில்தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. போதைப்பொருட்களின் நடமா ட்டம் அதிகரித்துள்ளது. மக்கள் நலனில் அக்கறை கொண்ட எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை மீண்டும் ஆட்சிப்பீடத்தில்அமர்த்த மக்கள் தயாராகிவிட்டனர் என்று கூறினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அதிமுகவின் கூட்டணி கட்சிகளான பாஜக,பாமக,அமமுக, மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வேட்பாளரின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

# செய்யூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் பெரும்பாக்கம் ராஜசேகர் அறிமுக கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நுகும்பல் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் செய்யூர் தொகுதியின் அதிமுக சார்பில் போட்டியிடும் பெரும்பாக்கம் ராஜசேகர் வேட்பாளரை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், மாநில அவை உறுப்பினர் தனபால் அவர்கள் தலைமையில் வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டினை சித்தாமூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கொளத்தூர் ரவி, சித்தாமூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பூபதி, இடைக்கழிநாடு பேரூர் கழக செயலாளர் ஆறுமுகம்,இவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது ராஜசேகர் அவர்களை அறிமுகப்படுத்தி 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் வழங்கப்பட்டுள்ள தேர்தல் அறிக்கைகளை எடுத்துரைத்தும் திமுக ஆட்சியில் நடைபெற்ற கஞ்சா உள்ளிட்ட பிரச்சனைகளால் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில் மீண்டும் அதிமுக தலைமையில் ஆட்சி அமைந்த உடன் பின்தங்கியுள்ள இந்த தொகுதியை சிறந்த தொகுதியாககொண்டுவர நான் இதற்கான பாடுபடுவேன் என அதிமுக வேட்பாளர் நிர்வாகிகளிடம் எடுத்துரைத்து வருகின்ற சட்டமன்ற தேர்தலில் செய்யூர் தொகுதியில் அதிமுக சார்பில் வேட்பாளராக களம் காணும் என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பரபரப்பு:

# அரசியல் கட்சிகள் புறக்கணித்ததாக கூறி 500 பேர் ஒரே நேரத்தில் வேட்புமனு வாங்க குவிந்ததால் தேர்தல் களம் அதிரடி





தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026 களம் சூடுபிடித்துள்ள நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை கண்டிராத ஒருநூதனபோராட்டத்தை செங்குந்த முதலியார் சமூகத்தினர் முன்னெடுத்துள்ளனர். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநில துணைத்தலைவரும், செங்குந்த மகாஜன சங்க ஈரோடு மாவட்ட தலைவருமான நந்தகோபால் மற்றும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மண்டல தலைவரும், செங்குந்த மகாஜன சங்க ஈரோடு மாவட்ட செயலாளருமான சோழா ஆசைதம்பி ஆகியோர் தலைமையில்சுமார் 500-க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் திரண்டு வந்து வேட்புமனு படிவங்களைவாங்கியதால் அங்கு பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் சுமார் 80 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டதங்களுக்கு, எந்த ஒரு அரசியல் கட்சியும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என குற்றம் சாட்டியுள்ள அவர்கள், இந்த புறக்கணிப்பைக் கண்டித்தே 500-க்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

நீண்ட வரிசையில் காத்திருந்து இவர்கள் வேட்புமனுக்களை வாங்கிச்சென்றசம்பவம் தேர்தல் அதிகாரிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்தனை நபர்களின் வேட்புமனுக்கள் ஏற்கப்படும் பட்சத்தில், வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கைமற்றும்தேர்தல் மேலாண்மையில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதால்தேர்தல்ஆணையம் இது குறித்து எடுக்கப்போகும் முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. சமூக ரீதியிலான இந்த அதிரடி எதிர்ப்பு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியின் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகப் பார்க்கப்படுகிறது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தவெக கட்சி சார்பில் விசில் சின்னத்தில் போட்டியிடும் விஜய் ஆர்.பரணிபாலாஜி அவர்கள் திருக்கோவிலூரின் முக்கிய வீதிகளில் (வடக்கு வீதி மேலவீதி ) மக்களை சந்தித்து மக்களிடையே கலந்துரையாடி அவர்களின் எண்ணங்களைக் கேட்டு அதன்படி நடப்பதாக உறுதி அளித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் மக்களிடையே ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்று எடுத்துரைத்து தன் கட்சியின் பிரசுரங்களை வழங்கி தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றார் திருக்கோவிலூர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் விஜய் ஆர்.பரணிபாலாஜி.

# தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர் கோவிந்தராசன் கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு



பர்கூர் சட்டமன்ற தொகுதி காவேரிப்பட்டினம்தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் அரசம்பட்டியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்களை நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை செய்தார் முன்னால் கூட்டுறவு சங்கதலைவர் பண்ணந்தூர் பழனிசாமி வரவேற்புரை ஆற்றினார் ,தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் கோவிந்தராசன் அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் எனகூறினார்,அனைத்து நிர்வாகிகளும் வேட்பாளருக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தனர் இந்நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் ஒன்றிய கழக செயலாளர் சாமு, ஓம் சக்தி நடராஜன், மாநில நிர்வாகி பில்லா மாதேஷ் பாரதிய ஜனதா கட்சி ஒன்றிய தலைவர் சாமிநாதன், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஒன்றிய செயலாளர்கள் அருள், சீனிவாசன், அமமுக மாவட்ட சார்பு அணி செயலாளர் சகாதேவன், தமிழ் மாநில காங்கிரஸ் நிர்வாகி ரங்கநாதன், அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றகழகநிர்வாகிகள் ஒன்றிய கழக துணை செயலாளர் சுரேந்திரன், ஒன்றிய பொருளாளர் ராமன், சார்பு அமைப்பு நிர்வாகிகள் கணேசன், கண்ணப்பன், தொழிலதிபர் பழனி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோ, முன்னாள் ஊராட்சி கழக செயலாளர்வேடியப்பன்,பெரியசாமி, சங்கர், கணேசன், ஞானப்பிரகாசம், வேடியப்பன், வீரப்பன், ராஜப்பன் சிராஜ், ஜெய்ஹிந்த், புருஷோத்தமன்,

பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் பாரதிய ஜனதாகட்சிநிர்வாகிகள் அம்மா மக்கள் முன்னேற்றகழகநிர்வாகிகள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# ஆதிபராசக்தி பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் ஐடிஐயில் முப்பெரும் விழா



செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் ஐடிஐ-யில்ஆண்டுவிழா விளையாட்டு நாள் மற்றும் வேலை வாய்ப்பு நாள் ஆகிய முப்பெரும் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் கல்லூரி கட்டணச் சலுகைகள் வழங்கி பாராட்டப்பட்டது. மேலும் வேலை வாய்ப்பு பெற்ற மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.மேலும்

கல்லூரி தொடர்ந்து 23 ஆண்டுகளாக மாநில அளவில் (IPAA) Overall Championship கோப்பையை பெற்று வருவதுடன் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்திலும் மாநில அளவில் தொடர்ந்து முதலிடம் வகித்து வருவது என தெரிவித்தனர். இவ்விழாவிற்கு கல்லூரி தாளாளர் டாக்டர் கோ.ப.செந்தில்குமார் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் ஜி. இளங்கோவன் ஆண்டு விழா அறிக்கையை வாசித்தார். நிசான் நிறுவனத்தின் பிரதிநிதிகளான மேலாளர் பி.பாலகிருஷ்ணன் மற்றும் பி.சுந்தரேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர். முதலாம் ஆண்டு துறைத்தலைவர் பி.ரகு வரவேற்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாக அலுவலர் ஜெ.ஹரிகிருஷ்ணன், தலைமை கணக்கீட்டு அலுவலர் ஆர்.பட்டு, துறைத்தலைவர்கள் வெங்கடசுப்ரமணியன், இளவழகன், ஆதிகேசவன், பிரபு, செல்வம், உடற்கல்வி இயக்குனர் பச்சையப்பன் ஆகியோர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் சிவில் துறையின் விரிவுரையாளர் கீர்த்தி நன்றியுரைவழங்கிவிழா இனிதே நிறைவுற்றது.

# ஓமலூர் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் ஏ.ஆர்.இளங்கோவன் அறிமுக கூட்டம்



சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ஓமலூர் தொகுதி தேமுதிக வேட்பாளர் ஏ.ஆர்.இளங் கோவன் அறிமுக கூட்டத்திற்கு சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் அமைச்சருமானவழக்கறிஞர்ராஜேந்திரன்தலைமை வகித்து தேமுதிக வேட்பாளர் இளங்கோவனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார் அப்போது அவர் கூறியதாவது. ரஜினி படத்தில் ஒரு வசனம் வரும்.ஆண்டவன் சொல்றான் அருணாசலம் செய்றான் என்ற வசனம் தான் அது. எங்க தலைவர் சொன்னால் தொண்டர்கள் நாம் செயல்படுகிறோம் தலைவர் கிழிக்க கோட்டை தாண்ட மாட்டோம் தலைவர் ஆணையிட்டால் எதற்கு அடிபணிந்து செல்பவர்கள் நாங்கள் அப்படிப்பட்டவர்கள் தான் திமுகவில் உள்ளவர்கள் அந்த அடிப்ப டையில் தேமுதிகபொதுச்செயலாளர்சுதீஷ் ஓமலூர்தொகுதி கேட்டார். எங்கள் தலைவரும் வழங்கலாம் என ஒப்புக்கொண்டார். எனவே தம்மைப் பொறுத்தவரை எங்களை பொறுத்தவரை தொகுதியில் உள்ள மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி பொருத்தவரை திமுக தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் தான் இந்த தொகுதியில் போட்டியிடுகிறார் எண்ணி பணியாற்ற வேண்டும் திமுக தலைவர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவர் போற்றுதிற்குரிய முதலமைச்சர் தான் இந்த தொகுதியில் வேட்பாளர் எனவே அந்த உணர்வோடு நிர்வாகிகள் தோழர்கள் அப்படிப்பட்ட உணர்வோடு இன்னும் 23 நாட்கள் பணியாற்ற வேண்டும் அனைவரும் உறக்கம் இன்றி பணியாற்றிட வேண்டும் ஜெயலலிதா பர்கூர் தொகுதியில் போட்டியிட்டு போது சுகவனம் போட்டியிட்டு வெற்றி பெற்றார் அவர் இந்த தொகுதி யின் தேர்தல் பார்வையாளராக உள்ளார். அவர் ஜெயலலிதாவையே தோற்கடித்தவர் இங்குள்ள வேட்பாளரை வெற்றி பெற செய் வைப்பது எளிது. அவர் வெற்றி பெற வைப்பார் நாங்கள் அவருக்கு பின்னால் இருந்து உழைக்கிறோம்.இந்த தொகுதியில் 35 ஆயிரம் 45 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று அதிமுக வை வீழ்த்துகிறோம் வீழ்த்த முடியாது என்பதெல்லாம் கிடையாது திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிட் டும் எனவே முதலமைச்சர் ஐந்து ஆண்டு நிறைவேற்றிய திட்டங்கள்குறித்துபொதுமக்கள்இடையேதெரிவித்து வாக்கு சேகரிக்க வேண்டும். இப்போது அற்புதமான தேர்தல் அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டிருக்கிறார். இந்த தேர்தல் அறிக்கை முழுமையாக வீடு வீடாக சென்று எடுத்து சொல்லுகின்ற போது நிச்சயமாக இந்த தொகுதியில் 40 ஆயிரம் வாக்கு வித்தி யாசத்தில் வெற்றி பெறுவது உறுதிஇப்படிபல்வேறுஉரிமைகள்நமக்குஇருக்கிறது. எதிர்க்கட்சியில் போட்டியிடுபவர் ஐந்தாண்டுகளில் ஒரு முறை கூட பொதுமக்களை பார்க்காத போது தேர்தல் நேரத்தில் பார்க்க வந்திருக்கிறார் நாம் மக்களோடு இருக்கிறோம் நாம் மக்களுக்காக உழைக்கிறோம் மக்களுக் காக நாம் தொடர்ந்து பணியாற்றுகிறோம் தேர்தல் அறிக்கையை மக்களிடத்தில் கொண்டு செல்லுங்கள் இப்படி செய்தால் வெற்றி உறுதி அதே நேரத்தில் அன்பான வேண்டுகோள் நிர்வாகிகள் தோழர்கள் தொண்டர்கள் எல்லோரும் காலை 7 மணி முதல் வாக்கு கேட்கும் பணியில் ஈடுபட வேண்டும் 10 அல்லது 11 மணி வரை வாக் குகள் சேகரியுங்கள் மாலையில் 4 மணி முதல் தொடங்கி 8 மணி வரை வாக்குகள் கேளுங்கள் இந்த 22அல்லது 23 நாட்களும் அயராது பயனாற்றினால் நிச்சயம் நம்மை வெற்றி தேடி வரும் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளும் 200 வாக்குகளாவது கூடுதலாக பெற வேண்டும் என பணியாற்றவேண்டும்.திட்டமிட்டுபிரித்துபணியாற்றி ஒவ்வொருவரையும் நேரில் அணுகி ஐந்து நிமிடம் அல்லது 10 நிமிடம் பேசி அவர்களை நம்வசம் நம் வசப்படுத்தி வாக்குகள் சேகரிக்க வேண்டும்.கணக்கு போட்டால் 60 ஆயிரம் வாக்கு வித்தி யாசத்தில் நாம் வெற்றி பெறலாம். இவ்வாறு சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் வழக்கறிஞுமான ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார் இந்த கூட்டத்தில் சேலம் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி. சேலம் ஓமலூர் தேமுதிக வேட்பாளர் ஏ.ஆர்.இளங் கோவன் ஓமலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் முன்னாள் எம்எல்ஏ சுகவனம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மோ.அருண்குமார், வித்தியாசமான முறையில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். மொடக்குறிச்சிநான்குரோடுபகுதியிலிருந்துவட்டாட்சியர்அலுவலகம்வரைகுதிரையில் ஊர்வலமாக வந்த அவரை, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகத்துடன் பின் தொடர்ந்தனர். திரளானோர் பங்கேற்ற இந்த ஊர்வலம் அப்பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்தது.

# மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமுலு சிவக்குமார் அறிமுக கூட்டம்

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பங்கேற்பு



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் அமுலு பொன்மலர் அறிமுக கூட்டம் சிலாவட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் உ த ய சூ ரி ய ன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன்மலர் அறிமுக கூட்டணி நிகழ்ச்சி காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் தலைமையில் நடைபெற்றது. இந்நி க ழ் வி ல் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஒரத்தி கே.கண்ணன் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வில் மண்டல பொறுப்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

அறிமுக கூட்டணி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன் மலரைஅறிமுகம்செய்து வைத்தார். அதன் பின்பு வரும் சட்டமன்றத் தேர்தலில் கிளை ஒன்றியம் நகரம்

உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள் உதயசூரியன் சி ன்னத்திற்கு பெருவாரியான வாக்குகள் சேகரிக்க வேண்டுமென

கழக நிர்வாகிகள் இடையே ஆலோசனைகள்வழங்கினார்.மேலும் கடந்தஐந்துஆண்டுகழக சாதனைகளை எடுத்துரைத்து பேசிய அமுலு பொன்குமாரை தனது பேச்சேமுதல்வெற்றிக்கு காரணம் என அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதத்தோடு பேசினார்.

இந்நிகழ்வின் போது மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் சாரதி மணிமாறன் காங்கிரஸ் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் ஜெ.பி. பிரபு தேமுதிக மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் எம்.ராஜேந்திரன் விசிக மாவட்ட செயலாளர் கீழ்.க.அன்புச்செல்வன் மக்கள் நீதி மையம் மாவட்ட செயலாளர் தினேஷ் கேசவன் மாவட்ட துணை செயலாளர் மலர்விழி குமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.உசேன் திமுக கழக நிர்வாகிகள் குமார்

பி.ச்.சத்யசாய் ஜி.தம்பு டி.வி.கோகுலகண்ணன் ஆர்.சுந்தரமூர்த்தி வி.டி. ஆர்.வி.எழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டனர் மேலும் இந்நிகழ்வில் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பொன் சிவக்குமார் அனைவருக்கும் நன்றியுரைவழங்கினார்.இதில் திமுக கழக நிர்வாகிகள் ம த ச் சா ர் ப ற் ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



திராவிட முன்னேற்ற கழகத்தின் கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வழக்கறிஞர் கு.மாலதி அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் (01.04.2026) நடைபெற்ற சைக்கிள் பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) கண்மணிதேவி, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) சிவக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# கோவை துடியலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக இமெயில் மூலம் மிரட்டல்

## சோதனை முடிவில் வெடிகுண்டு எதுவும் கைப்பற்றப்படாதால் புரளி என தெரியவந்துள்ளது




கோவை துடியலூரில் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் இன்று காலை இமெயில் மூலம் அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் கடிதம் வந்துள்ளது. அதில் பல்வேறு அமைப்புகள் பெயரில் பல்வேறு காரணங்களை வழியுறுத்தி மதியம் 1.15 மணியளவில் 13 குண்டுகள் வெடிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உள்ளே உள்ளவர்களை வெளியேற்றவும் என தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் அந்த கடிதத்தில் நாடு கடந்த திராவிட அரசு ஆஇய நாங்கள் என குறிப்பிட்டு மெட்ராஸ் டைகர்ஸ், தமிழ் விடுதலை அமைப்பு, தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்நாடு மீட்புப் படை ஆகியற்றுடன் இணைந்து தமிழ்நாட்டில்ஆளும்திமுகஅரசை சட்டபூர்மற்றதாக தீர்மாணித்து பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளர்.அதில் கோயம்புத்தூரில் முஸ்லிம்கள் மீது உ ப வழக்குகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் அவர்களை வெறும் வாக்கி வங்கிகளாக பயன்படுத்துதல், குடும்பத்தையும் முறைகேடாக பெற்ற நிதியையும் காப்பாற்றுவதற்காக ஆர் எஸ் எஸ் பிஜேபியுடன் ரகசிய கூட்டணிவைத்தல்,என்கவுண்டர்கள் காவல்துறை நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படாத காவல்துறை மற்றும் கட்சித் தொண்டர்களின் கொடூரம் என்ற பெயரில் சொந்த குடி மக்களுக்கு எதிரான வன்முறை, தமிழ்நாட்டில் உள்ள ஊடகங்கள் மீது தனிப்பட்ட கட்டுப்பாட்டை வைத்திருத்தல் மற்றும் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை தவறாக சித்தரித்தல், தமிழ்நாட்டிற்குள் இந்தியா முழுவதும் போதைப்பொருள் வர்த்தகத்தில் எம்கே ஸ்டாலின்குடும்பத்தினர் ஈடுபாட்டை வெளிப்படுத்துங்கள், நாங்கள் தமிழ்நாடு அரசுக்கு எதிராக போர் பிரகடனம் செய்துள்ளோம் எங்கள் தலைவரின் அதிரத்தையும் அடையாளமாக மார்ச் 31 முதல் தொடங்கும் சட்டபூர்வமாக மற்றதாக்கும் வாரத்தை நேரடி நடவடிக்கைவாரமாக அறிவித்துள்ளோம் கேரளாவில் உள்ள உங்கள் ஆர்டிஓ அலுவலகமே இன்று எங்கள் இலக்கு அனைத்து மனிதர்களையும் வெளியேற்றுங்கள் எங்களுக்கு சொத்து சேதம் மட்டுமே வேண்டும் என குறிப்பிடப்படுள்ளது.

இதையடுத்து ஆர்டிஓ அலுவலக அதிகாரிகள் உடனடியாக வெடிகுண்டு நிபுணர்களுக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த கோவை வெடிகுண்டு நிபுணர்கள் வெடிகுண்டி சோதனை செய்தும் கருவிகளைக் கொண்டு சோதனையில் ஈடுபட்டனர். சுமார் 1 மணி நேர சோதனையில் வெடிகுண்டுகள் எதுவும் சிக்காததால் இது வெகும் புரளி என தெரியவந்துள்ளது, மேலும் இதேபோல் கோவையில் உள்ள பல்வேறு ஆர்டிஓ அலுவலகங்களுக்கும் மிரட்டல் கடிதங்களை அ னு ப் பி யு ள் ள தா க தெ ரி ய வ ந் து ள் ள து . அங்கும் சோதனைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# வண்ணார்பேட்டை MSP பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது



தூத்துக்குடி சங்கரப்பேரி கான் மெட்டல் மைதானத்தில் வண்ணார்பேட்டை எம்.எஸ்.பி. பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட்

போட்டியில் மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி சக்திவேல், சேவியர், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் பல்வேறு அணிகள் பங்கேற்றன மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகையை வழங்கி வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், தவெக அஜிதா ஆக்னல், வசந்தகுமாரி, இரா பாலன், கிளைச் செயலாளர் சேசு ராஜா,ஊர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# துடியலூர் மணியன் குளம் காளியம்மாள் அறக்கட்டளை ஸ்ரீ குபேர ஆஞ்சநேயர் அன்னதான கைங்கரிய டிரஸ்ட் விஸ்வநாதபுரத்தில் நீர் மோர் பந்தல் திறப்பு



கோவை துடியலூர் அ ரு கே விஸ்வநாதபுரத்தில் துடியலூர் மணியன் குளம் காளியம்மாள் அறக்கட்டளை,ஸ்ரீ குபேர ஆஞ்சநேயர் அன்னதான கைங்கரிய டிரஸ்ட், ஸ்ரீ கணபதி மார்ட், கண்ணன் ஜீப்லி காபி,எம் ஆர் என் வாட்டர் சப்ளை மற்றும் ஜி வி வாட்டர் வாஸ் உ ள் ளி ட் டோ ர் இணைந்து 2 வது ஆண்டாககோடைவெய்யிலில் இருந்து பொதுமக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் நீர் மோர் பந்தல் திறந்து பொதுமக்களுக்குநீர்மோர்வழங்கினர்.

கோடை வெய்யிலின் தாக்கத்தில் இருந்து பொ து ம க் க ளி ன் தாகத்தை தீர்க்கும் வகையில் ஆண்டு தோறும் துடியலூர் மணியன் குளம் காளியம்மாள் அறக்கட்டளை, ஸ்ரீ குபேர ஆஞ்சநேயர் அன்னதான கைங்கரிய டிரஸ்ட், ஸ்ரீ கணபதி மார்ட், கண்ணன் ஜீப்லி காபி, எம் ஆர் என் வாட்டர் சப்ளை மற்றும் ஜி வி வாட்டர் வாஸ் உள்ளிட்டோர் இணைந்து ஏப்ரல் மற்றும் மே மாதம் என 2 மாதங்கள் நீர் மோர் பந்தல் திறந்து பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கி வருகின்றனர். அதேபோல் 2 வது ஆண்டாக கோவை மே ட் டு ப் பா ளை ய ம் சா லை விஸ்வநாதபுரத்தில் நீர் மோர் பந்தல் திறந்து பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கினர். நீர் மோர் பந்தலை துடியலூர் மணியன் குளம் காளியம்மாள் அறக்கட்டளை தலைவர் சிரவை ஆதினம் தவத்திரு குமர குருபர சுவாமிகள் திறந்து வைத்தார்.

சிறப்பு பூஜை செய்து தொடங்கப்பட்ட நீர்மோர் பந்தலில் பொதுமக்களுக்கு நீர் மோர் மற்றும் தர்பூசணி வழங்கினர். அதனை அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் வந்து வாங்கி பருகிச் சென்றனர்.தினமும் சுமார் 1000 லிட்டர் நீர் மோர் பொதுமக்களுக்கு வழங்குகின்றனர்.

மு ன் ன தா க விஸ்வநாதபுரம் ஸ்ரீ குபேர ஆஞ்சநேயர் கோவிலில் நீர் மோர் மற்றும் தர்பூசணி ஆகியவைகளை ஆஞ்சநேயருக்கு படைத்து சிறப்பு பூஜைகள் செய்து அங்கு வந்த பக்தர்களுக்கு நீர் மோர் மற்றும் தர்பூசணி வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் துடியலூர் மணியன் குளம் காளியம்மாள் அறக்கட்டளை செயளாலளர் வி கே சண்முகம், பொருளாளர் டி எஸ் சுந்தரம், கணபதி மார்ட் நிர்வாக இயக்குநர் கணபதி, பொது மேலாளர் அகிலன், ஸ்ரீ குபேர ஆஞ்சநேயர் அன்னதான கைங்கரிய டிரஸ்ட் தலைவர் பி சுப்பிரமணியன், செயலாளர் இளங்கோவன், அறங்காவலர் குழு கவிச்சந்திர மோகன், நிர்வாகிகள் தம்புராஜ் என்கிற காளிச்சாமி,எம் ஆர் என் வாட்டர்சப்ளை நாகராஜ், ஜி வி வாட்டர் வாஸ் உரிமையாளர் ஜெயஸ்ரீ உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட அரியலூர் மின்சார வாரிய அலுவலகத்தில் பெயர் பலகையை பேனரால் அடித்து ஒட்டப்பட்டதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேனரை அகற்றிவிட்டு பெயிண்ட் அடித்து பெயர்பலகை எழுத வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்

# இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரு மடங்கு அதிகரிப்பு

மேற்காசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரு மடங்காக உயர்த்தப்பட்டு, ஒரு கிலோ லிட்டர் ரூ.2.07 லட்சத்துக்கு விற்கப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில்கார்பரேஷன்,பாரத் பெ ட் ரோ லி ய ம் , ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை சர்வதேச சந்தை நிலவரங்கள் மற்றும் அந்நிய செலாவணி மாற்று விகிதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று எல்பிஜி மற்றும் ஏடிஎப் (aviation turbine fuel) விலைகளை மாற்றி அமைக்கின்றன. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28-ம் தேதி தாக்குதலை தொடுத்தன. இதற்கு ஈரான் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. ஈரானுக்கு எதிராக தொடங்கிய இந்த போர், வளைகுடா நாடுகளுக்கும் பரவியுள்ளது. மேலும், உலகுக்கு 4-ல் ஒரு பங்கு எரிபொருளை வழங்கும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. மோதல் ஒரு மாதத்தைக் கடந்து தொடர்ந்து நடைபெற்று வருவதால், சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

தற்போது, இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரண்டு மடங்காக உ ய ர் த் த ப் ப ட் டு ள் ள து . ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.1,10,703.08 உயர்த்தப்பட்டு, ரூ.2,07,341.22 ஆக விற்கப்படுகிறது. நேற்றைய விலையுடன் ஒப்பிடும்போது 114.5% உயர்த்தப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் பிரையண்ட்நகர் சிதம்பரம் நகர் வியாபாரிகள் நலச்சங்கத்தின் அலுவலகம் திறப்பு விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்பு



தூத்துக்குடி பிரையண்ட்நகர் சிதம்பரம் நகர்வியாபாரிகள் நலச்சங்கம் அலுவலகம் திறப்பு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் பிரையண்ட்நகர் 2வது தெருவில் உள்ள O.M.M மஹால் முதல் மாடியில் சங்கத்தின் அலுவலகம் திறப்பு விழா வியாபாரிகள் சங்கத் தலைவர் ஞானசெல்வன் தலைமையில் பொதுச்செயலாளர் பொன்ராஜ், முதன்மை துணைத் தலைவர் அழகு மந்திரி, பொருளாளர் பட்டாணி முத்து, முதன்மை கூடுதல் செயலாளர் ஜான் ஸ்டீபன் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் சங்கத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர் திருமணிராஜா, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ரூபஸ் அமிர்தராஜ் கலந்து கொண்டார்.

விழாவில்தொடர்ந்து பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது குறித்து மற்றும் சங்கத்தின் வளர்ச்சி தொடர்பாகவும். வணிகர்தின மாநாடு செல்வது குறித்தும் மேலும் சங்கத் தலைவரால் கொண்டுவரப்படும் இதர திட்டங்கள் சிறப்பாக வழிநடத்தத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்ற பொறுப்புகளை முறையாகத் தேர்வு செய்வது குறித்த ஆலோசனை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் கணேசன், செய்தி தொடர்பாளர் ஜெய்சிங், கௌதம், நிர்மல் சரவணகுமார், சிவில்ராஜ், மகளிர் அணி மாணிக்கராணி, பிரம்மசக்தி, ஜான்சிராணி, தனலட்சுமி மற்றும் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பச்சைமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில், நேற்று (ஏப்.1) 7ம் நாள் பங்குனி உத்திர திருவிழா காலை 6 மணிக்கு மகன்யாச அபிஷேகத்துடன் துவங்கி, 7.30 மணிக்கு படி பூஜை, 8மணி சண்முருக்குபச்சைஅலங்காரம்நடைபெற்றது. தொடர்ந்துபகல் 1 மணிவரைகாவடி, பால்குடஅபிஷேகம், மாலை 4 மணி திருத்தேர் வடம் பிடித்தல், இரவு 7 மணி தங்கரதம், 7.30 அலகு குத்துதல் மற்றும் இரவு 8 மணி வரை அன்னதானம் நடைபெற்றது.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (31.03.2026) அன்று பெருந்துறை, வாய்க்கால்மேடு அஜய் நிட்டெக்ஸ் பணிபுரியும் பணியாளர்களுடன் 100சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் கலந்துரையாடினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (01.04.2026) பவானி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்தார். உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, பவானிநகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டார்கள்.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.04.2026) பவானி பேருந்து நிலையத்தில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் பொதுமக்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்து தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.04.2026) பவானி பேருந்து நிலையத்தில் தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியில் ஒயிலாட்டம் ,கரகாட்டம், கட்டைக்கால் ஆட்டம், சிலம்பாட்டம் மற்றும் கும்மியாட்டம் துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, நகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டார்கள்.




சங்கராபுரம் அருகே உள்ள மேலப்பட்டு கிராமத்தில் தொடர்ந்து நான்காவது நாட்களாக சட்டமன்றத்தேர்தலை புறக்கணிக்கப் போவதாக கிராமமக்கள் கூறிவருகின்றனர். மேலப்பட்டு கிராம மக்கள் ஊர் முகப்பு பகுதியில் பேனர் வைத்து எதிர்ப்பு தெரிவித்து வருவதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (31.03.2026) அன்று பெருந்துறை, வாய்க்கால்மேடு அஜய் நிட்டெக்ஸ் 100சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டனர்.

# மதிமுக 4 வேட்பாளர்களும் உதய சூரியன் சின்னத்திலேயே போட்டி: வைகோ அறிவிப்பு



சென்னை: சீர்காழி தொகுதி மதிமுக வேட்பாளரும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர்வைகோ அறிவித்துள்ளார். முன்னர், ஒரு தொகுதியில் மட்டும் தனிச் சின்னத்தில் போட்டியிடுவோம் என்று வைகோ கூறியிருந்த நிலையில் இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026, ஏப்ரலில் நடைபெற இருக்கும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி தி.மு.கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றான சீர்காழி (தனி) தொகுதியிலும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இரா.செந்தில்செல்வன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கிறேன்." என்று குறிப்பிட்டு ள்ளார். இதன் மூலம் மதிமுகதனக்கு ஒதுக்கப்பட்ட 4தொகுதிகளிலுமே உதய சூரியன் சின்னத்திலேயே போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்துடன் மொத்தம் 176 தொகுதிகளில் உதய சூரியன் சின்னம் களம் காண்கிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போ க்குக் கூட்டணி யில் உள்ள மதிமுகவுக்குமொடக்குறிச்சி, மதுரை தெற்கு, கடையநல்லூர், சீர்காழி (தனி) ஆகிய 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28, தேமுதிகவுக்கு 10, விசிக-வுக்கு 8, கம்யூனிஸ்ட்கள் தலா 5, கொமதேக-2, மதிமுக -4, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மமக-வுக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் எஸ்டிபிஐ உட்பட சில சிறிய கட்சிகள் திமுகவின் உதய சூரியன் சின்னத்தில் தலா ஒரு தொகுதியில் களமிறக்கப்பட உள்ளன.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.